# தொழில் வாய்ப்பின் அவசியம்

...ரித்து இருப்பதை புள்ளி விபர அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இத்தொகையானது கடந்த வருடத்தின் இறுதி காலாண்டில் 389,406 ஆக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதேபோல் 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கையின் மொத்த வேலையற்றவர்களின் தொகை 372,135 ஆக பதிவாகியிருந்தது.

இவ்வாறான நிலையின் கடந்த வருடமும் இவ்வருடமும் பதிவான தொழிற்படையின் மொத்த




*Figure 3 : Unemployment rate by age group and gender – First quarter 2019*




*Figure 4 : Unemployment rate by level of education and gender – First quarter 2019*




| Quarter | Sri Lanka | Major Industry Group | | |
|---|---|---|---|---|
| | | Agriculture | Industries | Services |
| 2018 Q1 (No.) | 7,961,358 | 2,139,057 | 2,224,455 | 3,597,846 |
| (%) | 100.0 | 26.9 | 27.9 | 45.2 |
| 2018 Q2 (No.) | 7,970,154 | 1,927,886 | 2,190,168 | 3,852,099 |
| (%) | 100.0 | 24.2 | 27.5 | 48.3 |
| 2018 Q3 (No.) | 8,040,704 | 2,034,894 | 2,305,822 | 3,699,988 |
| (%) | 100.0 | 25.3 | 28.7 | 46.0 |
| 2018 Q4 (No.) | 8,088,448 | 2,072,954 | 2,236,604 | 3,778,889 |
| (%) | 100.0 | 25.6 | 27.7 | 46.7 |
| 2019 Q1 (No.) | 8,182,870 | 2,018,951 | 2,312,671 | 3,851,348 |
| (%) | 100.0 | 24.7 | 28.3 | 47.1 |

பட்டியலில் இணைந்துள்ளமை புலனாகின்றது. இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து தொழிற்படையில் புதிதாக இணைந்தவர்களின் தொகையிலும் பார்க்க வேலையற்றோர் தொகையில் புதிதாக இணைந்தவர் களின் தொகை குறைவாகவே உள்ளது. எனவே இலங்கையில் புதிய தொழில் வாய்ப்புக்கள் காணப்படுவதை இது உணர்த்து கின்றது. எனினும் தொழிற்படை அதிகரிப்பு வேகத்திற்கு ஏற்ப தொழில்வாய்ப்புக்களை உருவாக்க முடியாமை இலங்கையில் வேலையின்மை வீதம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக உள்ளது.

நாட்டின் வேலையின்மை வீதம் அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியில் நேரடி தாக்கம் ஏற்படுவதை மறுப்பதற்கில்லை. எனவே தொழிற்படை அதிகரிப்புக்கு ஏற்ப தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை அதிகளவான தொழில் வாய்ப்பை வழங்கும் துறையாக சேவைத்துறை காணப்படுகின்றது. அந்த வகையில் இவ்வருடத்தின் முதல் காலாண்டு வரையான காலப்பகுதியில் இத்துறையில் 3,851,348 பேர் தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இத்தொகை கடந்த வருட இறுதி காலாண்டில் 3,778,889 ஆக பதிவான நிலையில் இவ்வருடம் சிறிய அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அதே போன்று தொழில் வாய்ப்பை வழங்கும் துறைகளில் 2ஆம் இடம் வகிக்கும் கைத்தொழில் துறையில் இவ்வருடத்தின் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் 2,312,671 பேர் தொழில் வாய்ப்பினை பெற்றுள்ளனர். இத்துறையிலும் கடந்த வருடத்தின் இறுதி காலாண்டுடன் ஒப்பிடுகையில் தொழில் வாய்ப்பினை பெற்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இருப்பினும் எமது நாட்டின் விவசாயத்துறையை பொறுத்தவரை அத்துறையில் தொழில் வாய்ப்பினைப் பெறுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் கீழ் மட்டத்திலேயே பதிவாகி வருகின்றது. பொருளாதாரத்தின் முக்கிய மூன்று துறைகளில் விவசாயத்துறையானது தொழில் வாய்ப்பளிக்கும் பட்டியலில் தொடர்ந்தும் மூன்றாம் இடத்திலேயே இருந்து வருகின்றது.

அந்த வகையில் இவ்வருடத்தின் முதல் காலாண்டில் விவசாயத் துறையில் 2,018,951 பேர் தொழில் வாய்ப்பினை பெற்றுள்ளனர். இது மொத்த தொழிற்படையின் 24.7 சதவீதமாகும்.

தொழிலற்றவர்கள் தொகையை பாலின மற்றும் வயது அடிப்படையில் நோக்கும்போது இந்த எண்ணிக்கையில் அதிகளவானவர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர். அந்த வகையில் வேலையற்றவர்களின் மொத்த எண்ணிக்கையில் 6.9 சதவீதமானவர்கள் பெண்களாகவும் 3.4 சதவீதமானவர்கள் ஆண்களாகவும் காணப்படுகின்றனர்.

அதேபோன்றே வேலை வாய்ப்பற்றவர்களில் 15-24 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகமான அளவு உள்ளனர். இவ்வயதுக்கு இடைப்பட்டவர்களில் 208,107 பேர் தொழில் வாய்ப்பின்றி இருக்கின்றனர். இது வேலையற்றவர்களின் மொத்த தொகையில் 21.6 சதவீதமாகும் அதனுடன் 25-29 வயதுக்கு இடைப் பட்டவர்களில் 77,113 பேரும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 114,563 பேரும் வேலைவாய்ப்பின்றி உள்ளனர்.

இத்தரவுகளை வைத்து நோக்கும்போது அதிகளவான இளைஞர், யுவதிகளே தொழில் வாய்ப்பின்றி உள்ளமை வெளிப்படையாகத் தெரிகின்றது.

எனவே இளைஞர்களை இலக்காகக் கொண்டு புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டியது அவசியமாகும். இவ்வாறு இளைஞர்களை மையப்படுத்திய தொழில் வாய்ப்புக்கள் ஊடாக இனிவரும் காலங்களில் வேலையற்றோர் வீதத்தை கணிசமான அளவு குறைத்துக்கொள்ள முடியும்.





உங்களுக்கு சொந்தமில்லாத நிலத்திற்கான தவணைகளை செலுத்துகிறீர்களா?

நாங்கள் உங்களுக்கு உதவ தயாராக உள்ளோம்


